# கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 6.3.2026 அன்று கலந்துகொண்ட கழக மற்றும் அரசு நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு




● தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், 7,127 பயனாளிகளுக்கு ரூ.106 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியும், ரூ.6.02 கோடி மதிப்பிலான நிறைவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கிவைத்தும், ரூ.55.93 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் சிறப்புரையாற்றினார்.



● தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி சட்டமன்றத் தொகுதியில் இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தைத் திறந்துவைத்தார்.




● ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.



● தென்காசி மாவட்டத்தில், ரூ.15 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட விளையாட்டு வளாகத்தை ஆய்வுசெய்தார்.



● நாகர்கோவிலில், அறிஞர் அண்ணாவின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



● திருநெல்வேலி மாவட்டத்தில், ரூ.30 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனையைத் திறந்துவைத்தார்.



● கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தைத் திறந்துவைத்தார்.



● கன்னியாகுமரியில் நடைபெற்ற அரசு விழாவில், 7,601 பயனாளிகளுக்கு ரூ.91.26 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, 131 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.



● கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் சார்பில், கழக முன்னோடிகள் 73 பேருக்கு பொற்கிழிகளை வழங்கினார்.